DEPOSITION OF WITNESS
(Chapter XXII (Code of CRIMINAL Producer)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

Calender

Miscellancous — Case No. CC. 270/2018

Preliminary Register — P.W. 4

Sessions

Deposition of Witness for — Prosecution / Defence / Court

| | |
|---|---|
| Name | : Dr. Rameswari |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2021.

**முதல் விசாரணை** -

நான் அரசு தலைமை மருத்துவனை பத்மனாபுரத்தில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 28.07.2018 அன்று ராமகிருஸ்ணன் என்ற 77 வயதுடைய நபருக்கு பிரேத பரிசோதனை செய்தேன். பிரேத பரிசோதனை தொடங்கிய நேரம் மதியம் 2 மணி. உடல் படுக்க வைக்கப்பட்டு தோல், கண் கறுப்பு நிறமாக இருந்தது. தலை முடி வெள்ளை நிறமாக 1/4 இஞ்ச் இருந்தது. வெளிபுற காயங்கள்

1. உராய்வு காயம் 1/4 x 1/4 செ.மீ. அளவு வலது முட்டில் இருந்தது.

2. 1/4 x 1/4 செ.மீ. அளவில் உராய்வு காயம் இடது முட்டியில் இருந்தது.

3. வெட்டு காயம் 1/4 x 1 x 1 செ.மீ. அளவில் வலது நெற்றியில் இருந்தது. தையல் போடப்பட்டிருந்தது.

4. வெட்டு காயம் 2 x 3 x 1/2 செ.மீ. அளவில் தலையின் பின் பகுதியில் இருந்தது. தையல் போடப்பட்டிருந்தது.

பிரேத பரிசோதனை செய்வதற்கு 13 முதல் 15 மணி நேரத்திற்கு முன்பாக நடைபெற்றிருக்க வேண்டும். உடலின் விறைப்பு தன்மை முழுவதுமாக காணப்பட்டது. தலையில் முடி முழுமையாக இருந்தது. கண் மூடியிருந்தது. மூக்கில் இரத்த கசிவு இல்லை. வாய் மூடியிருந்தது. நாக்கு உள்ளே இருந்தது. நெஞ்சு பகுதி முழுமையாக இருந்தது. நெஞ்சு பகுதியை திறந்து பார்த்தபோது நெஞ்சில் நடு எலும்பு வலது பக்கம் உடைந்திருந்தது. 250 மி. லிட்டர் அளவில் உறைந்த இரத்தம் அதன் அடியில் இருந்தது. இருதயம் 330 கிராம் இருந்தது. அதில் 1 x 1 x 1/2 செ.மீ. அளவில் காயம் காணப்பட்டது. அந்த காயம் கீழ் பகுதியின் வலது பக்கத்தில் இருந்தது. நுரையீரல் வலது பக்கம் 520 கிராம் இருந்தது. இடது பக்கம் 480 கிராம் இருந்தது. வயிற்றில் 300 மில்லி லிட்டர் கறுப்பு நிற திரவம் காணப்பட்டது. மண்ணீரல் 130 கிராம் இருந்தது. ஒவ்வொரு கிட்ணியும் 140 கிராம் இருந்தது. தலையை உடைத்து உடைத்து பார்த்தபோது 100 மி.லிட்டர் கட்டியான இரத்தம் தலையின் பின் பகுதியில் இருந்தது. 50 மி. லிட்டர் இரத்தம் வலது பக்க நெற்றியில் இருந்தது. இடது பெருமூளையில் 4 x 3 x 4 செ.மீ. அளவில் வீக்கம் காணப்பட்டது. வலது பக்கம் பெருமீளையில் 3 x 3 x 3 செ.மீ. அளவில் வீக்கம் காணப்பட்டது. பிரேத பரிசோதனை மதியம் 3 மணி அளவில் முடிந்தது. தலையில் ஏற்பட்ட காயத்தினாலும் அதனால் ஏற்பட்ட இரத்த கசிவினாலும் மரணம் ஏற்பட்டிருக்க கூடும் என்று சான்றளித்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.2.

குறுக்கு விசாரணை இல்லை.